2014

# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றல் அறிக்கை
# PERFORMANCE REPORT









පළාත් පාලන සහ පළාත් සභා අමාත්‍යාංශය

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

MINISTRY OF LOCAL GOVERNMENT & PROVINCIAL COUNCILS

# செயலாற்றல் அறிக்கை
# 2014

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 01. | அமைச்சின் தூரநோக்கு | 7 |
| 02. | அமைச்சின் இலட்சிய நோக்கு | 7 |
| 03. | அமைச்சின் குறிக்கோள்கள் | 8 |
| 04. | குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இனங்காணப்பட்டுள்ள முக்கியமான விடயப் பரப்புகள் | 9-10 |
| 05. | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கீழுள்ள விடயப் பரப்புகள் | 11 |
| 06. | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கீழுள்ள பல்வேறு பிரிவுகளும் நிதிச்சட்ட சபைகளும் | 12-15 |
| 07. | அமைச்சின் அடிப்படை பணிகள் | 16-17 |
| 08. | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பரப்பினுள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட கருமங்கள் | 18 |
| 09. | செயலாற்றல் - 2014 | 19-40 |
| 10. | பிரதான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | 41-43 |
| 11. | செயற்திட்டத் தொடர் | 44-57 |
| 12. | உள்ளூராட்சி ஆளுகை நிறுவனம் (SLILG) | 58-61 |
| 13. | உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியம் (LLDF) | 62-66 |

# முன்னுரை

நாட்டினுள் சமத்துவம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு மாகாண சபைகளையும் உள்ளூராட்சி அதிகாரசபைகளையும் வலுப்படுத்தல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அடிப்படை குறிக்கோளாகும். அக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டில் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. இயந்திர உபகரணங்களை வழங்கி உள்ளூராட்சி அதிகாரசபைகளில் இயந்திர உபகரணப் பிரிவினை ஸ்தாபிப்தற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்தந்த மாகாணங்களில் வறுமையைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அவ்வாறே குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டதுடன் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் பொதுச் சேவைகள் வழங்கப்படுவதில் வினைத்திறனை ஏற்படுத்தவதற்காக நடமாடும் கூடாரங்கள் வழங்கப்பட்டன. பிரதேச சபைகளில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதி உதவிகளை வழங்கி பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படத்தப்பட்டன. மேலும், உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு 3600 லீற்றர் இயலளவு கொண்ட வெண்கல நிர் பவுசர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள குறைந்த வருமானம் கொண்ட 13 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தெரிவுசெய்யப்பட்டு முறைப்படி பொது மக்களுக்கான சேவைகளை வழங்கவதற்கு ஏற்ற விதத்தில் அவற்றுக்கு கட்டிட நிர்மாண உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 27.15 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தினை அமுல்படுத்தல் அமைச்சின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க அங்கமொன்றாக உருவாகியுள்ளது. ஹக்மன, தெஹிஓவிட, பல்லெபொல, பண்டுவஸ்நுவர, பெலிஅத்த, ஹொரண மற்றும் அக்கரைப்பற்று போன்ற நகர அபிவிருத்தி செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் இந்த அமைச்சின் கீழ் அமுலாக்கப்பட்டன. இதன் மூலம் பிரதேசசபைக் கட்டிடங்கள், நகர மண்டபங்கள், வர்த்தகத் தொகுதிகள், பொது நூலகங்கள், பொது மலசல கூட முறைமைகள், சிறுவர் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், வடிகால் முறைமைகள், தகனச் சாலைகள், நுழைவு வீதிகள்மற்றும் வாகன தரிப்பிடங்கள் போன்ற நிர்மாணங்களும் நவீனப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

போதியளவு வருமான மார்க்கங்கள் இன்மை காரணமாக பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அடையாதுள்ள 264 பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி உதவிகள் வழங்கப்பட்டன. இந் நிதி பொது உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல், திருத்துதல் மற்றும் புனர்நிர்மாணம் செய்தல் போன்றவற்றிற்காக பயன்படுத்தப்பட்டன.

உள்ளூராட்சி அதிகாரசபைகளால் வழங்கப்படுகின்ற சேவைகளின் பயனுறுதியை அதிகரிக்கும் நோக்குடன் 2014 ஆம் ஆண்டின் போதும் உள்ளூராட்சி வாரத்தினுள் பல்வேறு வேலைத்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் உள்ளூராட்சி முகாமைத்தவ போட்டியினை நடாத்தி வெற்றிபெற்ற உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

“எல்லோருக்கும் ஆரோக்கியமான சுற்றாடல்” என்ற தூரநோக்குடன் உள்ளூராட்சி அதிகாரசபை அதிகாரப் பிரதேசங்களில் திண்மக் கழிவு முகாமைத்துவம் முக்கிய தேவையொன்றாக

இனங்காணப்பட்டு அந்த நிறுவனங்களின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட செயற்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவதற்குத் தேவயைான நிதி மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டன.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் என்பவற்றின் கடன் உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட மாகாண வீதிகளை மேம்படுத்தும் செயற்திட்டங்கள், புரநெகும செயற்திட்டம், கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்தவ செயற்திட்டம், பாடசாலை கல்வி முறைமையினை உயிர்ப்பித்தல் செயற்திட்டம், இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் போன்ற அநேக வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் நாட்டின் சகல மாகாணங்களையும் உள்ளடக்கும் விதத்தில் இந்த அமைச்சின் ஒருங்கிணைப்புடன் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டன.

மேலே குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டில் உப தேசிய கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய சட்டரீதியான மறுசீரமைப்பு நடவடிக்கைகளிற்கு அவசியமான உதவிகளை வழங்குதலும் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. அதன் கீழ் அபிவிருத்தி செயற்பாடுகளிற்கு தடையாக தற்போது காணப்படுகின்ற சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் உப யாப்புக்கள் போன்ற சட்டரீதியான ஏற்பாடுகளை நடைமுறைக்கு ஏற்ற விதத்தில் தயாரித்து மேம்படுத்துவதற்காக தேசிய மட்டத்தில் வழங்க முடியுமான உதவிகளையும் வசதிகளையும் வழங்குவதற்கு இந்த அமைச்சு முன்னின்று செயற்பட்டது.

இந்த அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்ற இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம், முகாமைத்துவம், ஆலோசனை, மற்றும் பயிற்சியளித்தல்கள் மூலம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் தொழில்நுட்ப இயலுமைகளை முன்னேற்றும் நோக்குடன் பயிற்சிச் செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் நடைமுறைக்கேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 இல் செயற்படுத்தப்பட்டன.

நகர மற்றும் அரை நகர அவ்வாறே கிராமிய பிரதேசங்களில் வசிக்கின்ற மக்களுக்கு உள்ளூராட்சி அதிகாரசபைகளிடமிருந்தும் மாகாண சபைகளிடமிருந்தும் வழங்கப்படுகின்ற சேவைகளை வினைத்திறன் மற்றும் பயனுறுதியாக்கும் நோக்குடன் 2014 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் செயன்முன்னேற்றங்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

01

## அமைச்சின் தூரநோக்கு

அதிகாரப் பகிர்வு, பன்முகப்படுத்தல் மற்றும் பங்கேற்றல் ஆட்சிமுறைக்கு மாறுவதன் மூலம் இலங்கையில் சமத்துவமானதும் நிலையானதுமான அபிவிருத்தியைத் தாபிப்பதற்குச் செயற்படுகின்ற முன்னுரிமை வாய்ந்த, முன்னோடி நிறுவனமாதல்.

02

## அமைச்சின் செயற்பணி

பொதுமக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியவாறான வினைத்திறமை வாய்ந்ததும் பயன் வாய்ந்ததுமான மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி முறையொன்றை உறுதி செய்தல் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கட்டமைப்பை வலுவூட்டுவதன் மூலம் இலங்கையில் சமத்துவமானதும் நிலையானதுமான மானிட அபிவிருத்தியை

# 03 அமைச்சின் குறிக்கோள்கள்

- மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்குமிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.
- மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை வகுத்தல்.
- தேசிய கொள்கை வட்டத்துக்குள் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- நிதி, தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான உதவிகளை வழங்குதல் மற்றும் மறுசீரமைப்பை அறிமுகப்படுத்தல்
- சர்வதேச தொடர்புகளைப் பேணிவருதல் மற்றும் வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- உள்ளூராட்சி நிறுவனங்களின் தாபிப்பு மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான தேசிய மட்டப் பொறுப்புக்கள்
- பயனுள்ள பன்முகப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டைக் கண்காணித்தல்
- பௌதிக, பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்.

# 04 குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இனங்காணப்பட்டுள்ள பிரதான துறைகள்

## 01. உள்ளூராட்சிக்கு அவசியமான தேசிய சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்றவாறு தயாரித்தல்

*செயற்பாடுகள்: —*

- உள்ளூராட்சி தேர்தல் (திருத்த) சட்டம் மற்றும் உள்ளூராட்சி (விசேட விதிகள்) சட்டம் ஆகியவை நிறைவேற்றப்பட்டமை
- மாநகர சபை கட்டளைச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டமை
- நகர சபை கட்டளைச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டமை
- பிரதேச சபை சட்டம் திருத்தியமைக்கப்பட்டமை

*இவற்றின் கீழ்*

- உள்ளூராட்சி நிர்வாகம், ஆளணிக் கட்டுப்பாடு, வருமானமீட்டல் தொடர்பான சட்டங்களை நாளதுவரையாக்குதல்
- பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் தொடர்பான சட்டங்களை சட்டங்களை நாளதுவரையாக்குதல்
- தற்கால தேவைக்கேற்ப பௌதீக திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான புதிய சட்டங்களைத் தயாரித்தல்
- பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் தொடர்பான சட்டங்களைத் தயாரித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன

## 02. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் நல்லாளுகைக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்

*செயற்பாடுகள்: —*

- அறிவூட்டலும் பயிற்சி வழங்கலும் (உள்ளூராட்சி ஆளுகை நிறுசனத்தின் வழிகாட்டலின் கீழ் அரசியல் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்)
- பதவியணியினர் தேவைகளை நிறைவேற்றுதல்
- சட்டங்களை வரைதல் மற்றும் அமுலாக்கல் ஆற்றலை மேம்படுத்துதல்
- உள்ளூராட்சி நிறுவனங்களை தரப்படுத்தல்
- உள்ளூராட்சி மறுசீரமைப்பினை அறிமுகப்படுத்தல்

## 03. உள்ளூராட்சி நிறுவனங்கிளன் சேவை வழங்கலை வினைத்திறனாக்குதல்.

*செயற்பாடுகள்: —*

- செயற்பாடுகளை மறுசீரமைத்தல்
- கணனிமயப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் பொறிமுறையொன்றை உருவாக்குதல்
- கழிவு முகாமைத்துவம்
- மலசலக் கால்வாய் முறைமையினை முகாமைத்துவம் செய்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தேவையான வாகனங்கள், இயந்திர உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்
- குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் பொதுச் சேவை வசதிகளை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல்
  - கீழ்க்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
  - பேணுதல் நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

## 04. மாகாண சபைகளுக்கான துணைச் சேவைகளை வழங்குதல்

*செயற்பாடுகள்: —*

- மாகாண சபைகளுக்குத் தேவையான மீண்டெழும் செலவினங்களை விடுவித்தல்
- மாகாண சபைகளின் செலவினங்களைப் புலனாய்வு செய்தல்

## 05. சமநிலையான பிரதேச அபிவிருத்தியினை ஏற்படுத்தல்

*செயற்பாடுகள்: —*

- பிரதேச ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பிரதேச வீதிகள், சுகாதாரம், கல்வி, போன்ற துறைகளுக்காக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல்.
- சிறிய மற்றும் நடுத்தரளவான நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்
- பிரதேச பொருளாதார மத்திய நிலையங்களை முன்னேற்றுதல்
- உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ்க்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல்

# 05 உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்குரிய விடயப் பரப்புகள்

- கிராமங்களிலுள்ள சனத்தொகை அடர்த்தியினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான கிராமங்களில் நீர்ப்பாசனத் திட்டங்களை செயற்படுத்தல்
- பிரதேசத்தின் கேந்திரமையங்களை இனங்காண்பதற்காக புதிய வீதிகளை அமைத்தல்
- விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய வீதிகளை கண்டறிந்து திருத்தயமைத்தல்
- வீதிகளைப் பேணுவதற்காக முகாமைத்துவ முறைமையொன்றை ஈடுபடுத்துதல்
- முக்கியமான முச்சந்திகளை இனங்கண்டு வாகன முகாமைத்துவ முறை மற்றும் நடைபாதை வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை செய்தல்.
- முச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிடங்களை வழங்குதல்
- நகரசபை, மாநகரசபைகளின் கழிவு முகாமைத்துவ வசதிகளையும் நீர் வழங்கலையும் பெற்றுக்கொடுத்தல்
- பொது இடங்கள் மற்றும் சேவைகள் வழங்கல் இடங்களிற்கான நுழைவு வசதிகளை மேம்படுத்தி கண்காணித்தல்
- ஓய்வுநேர பூங்காக்கள் மற்றும் நடமாடும் நடைபாதைகளை அமைத்தல்
- மாகாணசபைகள் மற்றும் பிரதேச சபைகளில் மகளிர் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்

# 06 உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு பிரிவுகளும் நியதிச்சட்ட நிறுவனங்களும்

**உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிறுவனங்களின் தேவைகளுக்கு இசைவாக்கம் காட்டுவதை வசதியாக்கும் பொருட்டு அமைச்சில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளும் நிறுவனங்களும்**

- கௌரவ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரின் அலுவலகம்
- கௌரவ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் பிரதி அமைச்சரின் அலுவலகம்
- அமைச்சின் செயலகம்
- நிர்வாகப் பிரிவு
- நிதிப் பிரிவு
- உள்ளூராட்சிப் பிரிவு
    - உள்ளூராட்சி மறுசீரமைப்புப் பிரிவு
    - உள்ளூராட்சி முறைப்பாடுகள் மற்றும் தகவல் பிரிவு
- மாகாண சபைகள் பிரிவு
- அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு
    - குறை வருமானமுடைய உள்ளூராட்சி நிறுவனங்களை கட்டியெழுப்புதல் பிரிவு
    - செயற்பாட்டுப் பிரிவு
    - சிறிய மற்றும் நடுத்தரளவு நகர அபிவிருத்திப் பிரிவு
    - வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் ஒருங்கிணைத்தல் பிரிவு
    - நாட்டுக்கு மகுடம் அபிவிருத்திப் பிரிவு
    - ஊடக பிரிவு
    - தகவல் தொழில்நுட்பப் பிரிவு

- சட்டப் பிரிவு
- தேசிய கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்
    - டெங்கு ஒழிப்புப் பிரிவு
- செலவின புலனாய்வுப் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம்
- உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் விடயப் பரப்பில் ஒன்றான தேசிய பயிற்சி நிறுவனமெனும் உள்ளூர் ஆளுகை நிறுவனம் இவ் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. மேலும் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்தின் முகாமைத்துவமும் அமைச்சின் கீழ் வரும் விசேட பணிகளில் ஒன்றாகும்.

## உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரின் கீழ் உள்ள பல்வேறு பிரிவுகள்

*01. நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு*




*02. அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு*



03. கொள்கை மற்றும் புலனாய்வுப் பிரிவு




04. உள்ளக கணக்காய்வுப் பிரிவு



# 07 அமைச்சின் முக்கிய பணிகள்

அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்குமிடையே ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தல், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிறுவனங்களில் நல்லாளுகையை மேம்படுத்தல், வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் போன்றன.

## 01. மாகாண சபைகளுக்கான பிரதான செயற்பாடுகள்

- 9 மாகாண சபைகளுக்கும் 335 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான உதவிச் சேவைகளை வழங்குதல்.
- உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்களுக்கான நிறைவேற்று நிறுவனமாக செயற்படுதல்
- உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் மற்றும் இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவனம் போன்வற்றுக்கு வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்கல்
- தேசிய கழிவு முகாமைத்துவ உதவி நிலையத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு கழிவு முகாமைத்துவம் தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
- மாகாண சபைகளுக்கான நிதி ஏற்பாடுகளை விடுவித்தல் செலவுளை புலனாய்வு செய்தல்
- வெளிநாட்டு கடன் நிதியின் மூலம் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- கிழக்கு மற்றும் வட மாகாண நிர்வாக நடவடிக்கைகளை வலுவூட்டச் செய்தல்
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகர அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தல்

## 02. உள்ளூராட்சிக்கான பிரதான செயற்பாடுகள்

- உட்கட்டமைப்பு வசதிகள், மனித வள அபிவிருத்தி மற்றும் நல்லாளுகையை மேம்படுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உதவிபுரிதல்
- பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விசேட அபிவிருத்திக்கான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்
- கழிவினை முகாமைத்துவ வேலைத்திட்டங்களை முறைப்படியாகவும் பலமுள்ளதாகவும் மேற்கொள்வதற்கு உதவுதல்

- உள்ளூராட்சி யாப்பை திருத்தியமைத்தல் மற்றும் மறுசீரமைத்தலுமான விடயங்களுக்கு உதவுதல்
- கிராமிய வீதிகளை மேம்படுத்தல், அனர்த்த நிவாரண முகாமைத்துவம் தொடர்பான முனனேற்பாடுகளை செய்தலும் நிறுவன ரீதியான ஆற்றல்களை மேம்படுத்தலும்.
- கழிவு முகாமைத்துவப்படுத்தல், மலசல கழிவு கால்வாய்களை நவீனப்படுத்தல்
- இயந்திரங்கள்இ கழிவு பவுசர், நீர் பவுசர் மற்றும் டபல்கெப் வாகனங்கள் போன்ற வசதிகளை வழங்குதல்

# 08 உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பரப்பினுள் இவ் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள்

**இந்த அமைச்சினால் 2014 ஆம் ஆண்டில் முன்னுரிமை வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள்:**

01. இயந்திர உபகரணங்களை வழங்குவதன் மூலம் இயந்திர உபகரண பிரிவொன்றை தாபிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருந்தமை

02. பாதீட்டு முன்மொழிவுகளிற்கு அமைவாக அந்தந்த மாகாணங்களில் வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

03. குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி அதிகாரசபை பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக நிதி உதவிகளை வழங்குதல்.

04. உள்ளூராட்சி நிறுவனங்களில் பொதுச் சேவைகள் வழங்கப்படுதலை வினைத்திறனாக்குவதற்காக நடமாடும் கூடங்களை வழங்குதல்

05. பிரதேச சபைகளில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதி உதவிகளை வழங்கி பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுலாக்குதல்.

06. 3600 லீற்றர்கள் இயலளவுடைய வெண்கல நீர்பவுசர்களை வழங்குதல்

07. திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் 02 வெளிநாட்டுதவி செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

# 09 செயலாற்றுகை - 2014

## 9.1 உள்ளூராட்சிப் பிரிவு

### 9.1.1 குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களை கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டம்

இந்த ஆண்டில் 07 மாகாணங்களிலுள்ள குறைந்த வருமானம் கொண்ட 13 உள்ளூராட்சி நிறுவனங்களை தெரிவுசெய்யப்பட்டு உரிய விதத்தில் மக்களிற்கு சேவைகளை வழங்குவதற்காக அந்நிறுவனங்களிற்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தல், உபகரணங்களை வழங்குதல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளைச் செயற்படுத்துவதற்காக ரூபா 27.25 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2014.12.31 இல் உள்ளவாறு ரூபா 27.15 மில்லியன் செலவிடப்பட்டு குறித்துரைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| தொடர் இல. | செயற்திட்டம் | உள்ளூராட்சி நிறுவனம் | ஈடுபடுத்திய தொகை (ரூபா மில்) |
|---|---|---|---|
| 01 | கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்தல் | ஹிக்கடுவ நகர சபை<br>பலங்கொட ந.ச.<br>ஜீலானி தேசிய பாடசாலை<br>போல்பிதிகம பி.ச.,<br>பொதுவில் பி.ச,<br>கங்கவடகோரலை பி.ச,<br>ஹொரவபொத்தானை பி.ச<br>எல்ல பி.ச | 23.40 |
| 02 | அலுவலக உபகரணங்களையும் தளாபடங்களையும் கொள்வனவு செய்தல் | பண்டுவஸநுவர பி.ச.,<br>ரம்பாவ பி.ச.<br>வீரகெடிய பி.ச., | 2.00 |
| 03 | நூலகப் புத்தகங்கள், வீதிகளை கொங்ரீட் செய்தல் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளிற்காக | மாவத்தகம பி.ச.<br>அலவ்வ பி.ச.<br>ஊவா மாகாணம் | 1.75 |
| **ஈடுபடுத்தி தொகை** | | | **27.15** |
| **நிதிசார் செயன்முன்னேற்றம்** | | | **99.6%** |
| **பௌதீக செயன்முன்னேற்றம்** | | | **100%** |

மேலே 9.1.1 இல் குறிப்பிடப்பட்டவாறு பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களை கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அவ்வாறான பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களிற்காக ஈடுபடுத்திய தொகைகள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறை அட்டவணை 01 இலும் வரைபும் இல. 01 காட்டப்படுகின்றது.

| | மாகாணம் | ஈடுபடுத்திய தொகை ரூபா |
|---|---|---|
| 01 | தெற்கு | 3,704,143.00 |
| 02 | வடமேல் | 3,320,974.00 |
| 03 | சப்ரகமுவ | 1,231,069.00 |
| 04 | ஊவா | 2,973,257.00 |
| 05 | வட மத்திய | 3,315,120.00 |
| 06 | மத்திய | 7,000,000.00 |
| 07 | கிழக்கு | 5,606,183.00 |
| **மொத்தம்** | | **27,150,746.00** |

**அட்டவணை இல. 01**

**பின்தங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களிற்காக நிதியினை ஈடுபடுத்தல்**




**வரைபட இல. 01**

### 9.1.2 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை திருத்துதல்

மிகவும் பயனுள்ள சேவைகளை வினைத்திறனாக வழங்கும் நோக்குடன் 16 உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படுகின்ற வாகனங்களை திருத்தவதற்காக 2014 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 22.75 மில்லியனாக காணப்பட்டதுடன் செலவிடப்பட்ட தொகை ரூபா 19.03 மில்லியனாகும்.

| தொடர் இல. | உள்ளூராட்சி நிறுவனம் | ஈடுபடுத்திய தொகை (ரூபா மில்) |
|---|---|---|
| 01 | ராஜாங்கனை பிரதேச சபை | 0.24 |
| 02 | கொபைய்கனே பிரதேச சபை | 1.28 |
| 03 | நிகவரெடிய பிரதேச சபை | 1.40 |
| 04 | அலவ்வ பிரதேச சபை | 1.49 |
| 05 | கல்கமுவ பிரதேச சபை | 1.50 |
| 06 | நாரம்மல பிரதேச சபை | 1.36 |
| 07 | கருவலகஸ்வெவ பிரதேச சபை | 0.94 |
| 08 | புத்தளம் பிரதேச சபை | 1.40 |
| 09 | அக்குரண பிரதேச சபை | 1.50 |
| 10 | கங்கஇஹல கோரலை பிரதேச சபை | 1.08 |
| 11 | உடபளாத பிரதேச சபை | 0.84 |
| 12 | பாததும்பர பிரதேச சபை | 1.48 |
| 13 | பூஜாபிடிய பிரதேச சபை | 1.03 |
| 14 | அம்பாந்தோட்டை மாநகர சபை | 0.91 |
| 15 | பத்தேகம பிரதேச சபை | 1.08 |
| 16 | அல்பிடிய பிரதேச சபை | 1.50 |
| **ஈடுபடுத்திய தொகை** | | **19.03** |
| **நிதிசார் செயன்முன்னேற்றம்** | | **83.65%** |
| **பௌதீக செயன்முன்னேற்றம்** | | **100%** |

### 9.1.3 உள்ளூராட்சி வாரம்

இலங்கையில் உள்ளூராட்சி மன்ற முறைமையினுள் அந்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் மக்கள் பயன்பாட்டு சேவையின் மேம்பாட்டுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அந்த நிறுவனங்களில் மானிட மற்றும் பௌதிக வளங்களை பயன்படுதி மக்களுக்கு உயர்மட்ட சேவையினை வழங்குதற்குத் தேவையான பின்னணியினை உருவாக்கல் மற்றும் உள்ளூராட்சி தொடர்பிலும் பொது மக்கள் சேவைகள் தொடர்பிலும் தொடர்பிலும் பொது மக்களுக்கிடையில் சிறந்த மனப்பாங்கொன்றையும் தொடர்பொன்றையும் கட்டிடயெழுப்புதல் போன்றன உள்ளூராட்சி வாரம் ஒன்றை நடாத்தலின் நோக்கமாகும். இன்படி, இவ்வருடமும் அமைச்சின் உத்தியோகத்தர்களால் மாகாண அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளூராட்சி வாரத்தினுள் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

| தேறிய ஏற்பாடு | செலவிடப்பட்ட தொகை | நிதிசார் செயன்முன்னேற்றம் % |
|---|---|---|
| ரூபா 5 மில்லியன் | ரூபா 4.6 மில்லியன் | 100 |

### 9.1.4 உள்ளூராட்சி முகாமைத்துவ போட்டியையும் சுவர்ண புரவர விருது வழங்கல் விழாவையும் நடாத்துதல்

இவ் அமைச்சின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் நல்லாளுகையினையும் முகாமைத்துவ செயற்திறனையும் மேம்படுத்தும் நோக்கில், தேசிய மட்டத்தில் உள்ளூராட்சி முகாமைத்துவ போட்டியை நடாத்தி அதில் வெற்றிபெறும் மன்றங்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்குதல், அவ்வாறு வெற்றியீட்டிய சபைகளை தேசிய மட்டத்தில் மதிப்பீடு செய்து பாராட்டும் பொருட்டு சுவர்ண புரவர விருது வழங்கல் வைபவம் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி பத்தரமுல்லையிலுள்ள வோடர்ஸ் எஜ் இல் நடாத்தப்பட்டது.

| தேறிய ஏற்பாடு | செலவிடப்பட்ட தொகை | நிதிசார் செயன்முன்னேற்றம் % |
|---|---|---|
| ரூபா 11.8 மில்லியன் | ரூபா 11.8 மில்லியன் | 100 |







**2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் பத்தரமுல்லையிலுள்ள வோடர்ஸ் எஜ் இல் இடம்பெற்ற சுவர்ண புரவர விருது வழங்கல் வைபவத்தில் வெற்றிபெற்ற உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு பரிசுகளை வழங்குதள்.**

### 9.1.5 பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி மன்ற மாநாட்டை நடாத்துதல்

பொதுநலவாய நாடுகளின் ஆசிய உள்ளூராட்சி மாநாடு 2014 செப்தெம்பர் 29 ஆந் திகதி கௌரவ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரின் தலைமையில் கொழும்பு கலதாரி ஹொட்டேலில் நடாத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் மாலைதீவு, பாகிஸ்தான், வங்காலதேசம், இந்தியா, மலேசியா போன்ற நாடுகளின் இராஜதந்திரிகளும் பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி மாநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது.

## 9.2 மாகாண சபைகள் பிரிவு

மாகாண சபைகளின் செயற்பாடுகளிற்கு வசதியளித்தல், மாகாண சபைகளிற்கும் மத்திய அரசாங்கத்திற்குமிடையில் ஒருங்கிணைப்பு மற்றும் மனித வள அபிவிருத்தி போன்ற பணிகள் இப்பிரிவினால் முக்கியமாக நிறைவேற்றப்படுகின்றன. இப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளும் அவற்றின் செயன்முன்னேற்றங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

*2014.12.31 இல் உள்ளவாறு இந்த பிரிவின் செயற்பாடுகளின் பௌதிக முன்னேற்றம்*

| தொடர் இல. | செயற்பாடுகள் | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழுவினால் இந்த அமைச்சிற்கு அனுப்பப்படுகின்ற சேவைப் பிரமாணக் குறிப்புகளை மாகாண அரசாங்க சேவைக்குப் பொருத்தமான விதத்தில் தயாரித்தல் | 06 பதவிகளுக்காக தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழு பரிந்துரைத்திருந்த ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மேலதிக நடவடிக்கைகளிற்காக பிரதான செயலாளர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை |
| 02 | காணிகளை கையேற்பதற்காக தொடர்புடைய மாகாண சபைகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகளை பரிசீலித்து காணிகள் அமைச்சிற்கு அனுப்பி வைத்தல், கையேற்பதற்கான எதிர்ப்புகளை பரிசோதிப்பதற்காக தொடர்புடைய பிரதான செயலாளர்களிற்கு அனுப்பி வைத்தல் மற்றும் கையேற்பதுடன் தொடர்புடைய (38 ஆவது உப ஏற்பாடுகளின் கீழ்) பரிந்துரைகளுடன் காணிகள் அமைச்சின் கௌரவ அமைச்சருக்கு அறிவித்தல் | இவ் ஆண்டில் 24 கோரிக்கைகள் கிடைத்திருந்ததுடன் அதில் 14 காணிகள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. குறைபாடுகளுடன் கூடிய 10 கோரிக்கைகள் மாகாண பிரதான செயலாளர்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. |
| 03 | அரசாங்க மற்றும் வெளிவாரி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற முறைப்பாடுகளை தொடர்புடைய நிறுவனங்களிற்கு அனுப்பி வைத்தல் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பொதுமக்கள் முறைப்பாடுகள் குழுவினால் அனுப்பிவைக்கப்பட்ட | பாராளுமன்றத்தின் பொதுமக்கள் முறைப்பாடுகள் குழுவிடமிருந்து இந்த அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்ட 12 முறைப்பாடுகள் குறித்த அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு பரிந்துரைகள் பெறப்பட்டு பதில்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்தல், 21 முறைப்பாடுகளிற்கான |

| | | |
|---|---|---|
| | முறைப்பாடுகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் | கோவைகளை பரீட்சித்து பொதுமக்கள் முறைப்பாடுகள் குழுவிற்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல், பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் தனி நபர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற 34 முறைப்பாடுகள் குறித்த நிறுவனங்களிற்கு இந்த அமைச்சின் பரிந்துரைகளுடன் அனுப்பிவைக்கப்படல் |
| 04 | மாகாண சபைகளிற்காக வாகனங்களைக் கொள்வனவு செய்தல் | கிடைக்கப்பெற்ற 14 முறைப்பாடுகள் பரீட்சிக்கப்பட்டு பொருத்தமான பரிந்துரைகள் வழங்கப்பட்டு பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த கோரிக்கைகளில் 05 இற்காக திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |
| 05 | மாகாண சபை உறுப்பினர்களிற்கு வரப்பிரசாதங்கள் மற்றும் வசதிகளை வழங்குதல் | மரணித்த 04 மாகாண சபை உறுப்பினர்களிற்காக வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அமைச்சரவைக்கு விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்படுதல். அவற்றில் 03 இற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.<br><br>வரப்பிரசாதங்கள் மற்றும் வசதிகளுக்காக கிடைக்கப்பெற்ற 12 கோரிக்கைகளிற்கு இந்த அமைச்சின் பரிந்துரைகளை குறித்த அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தல் |
| 06 | பிரதான செயலாளர்களின் கூட்டங்களை நடாத்துதல் | 07 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. |

## 9.3 சட்டப் பிரிவு

ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய கொள்கைக் கட்டடைப்பிற்குள் மக்கள் சேமநலனை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்தினாகவும் நிறைவேற்றவதற்காக 13 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களால் செயற்படுத்தப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளிற்குத் தேவையான ஒருங்கிணைப்பு, வழிகாட்டல், சட்டரீதியான, தொழில்நுட்ப ரீதியான மற்றும் நிதிசார் உதவிகள் வழங்குவதனை நோக்காகக் கொண்டு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் சட்டரீதியான பணிப்பொறுப்புக்களை மிகவும் பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்தவதற்காக அமைச்சின் சட்டப்பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

### 9.3.1 பணிப்பொறுப்புக்கள்

01. உப தேசிய கட்டுப்பாட்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களிற்கு இடையே ஒருங்கிணைப்பை பேணி வருகையில் எழுகின்ற சட்டரீதியான பிரச்சினைகள் தொடர்பில் மத்தியஸ்தம் வகித்தல், அதன்போது காணப்படுகின்ற சட்டங்கள், உப சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைத் தேவைக்கேற்ப புதிய சட்டங்கள் மற்றும் உப சட்டங்களை வகுப்பதற்கு தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

02. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பரப்பில் எழுகின்ற சட்டரீதியான பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குதல்.

03. அமைச்சிற்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை பேணி வருதல்.

04. கீழ்மட்ட நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்குகொள்ளல் மற்றும் அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தல்

05. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தொடரப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள்

### 9.3.2 சட்டப் பிரிவின் 2014 ஆம் ஆண்டிற்கான செயன்முன்னேற்றம்

சட்டப் பிரிவினால் இந்த ஆண்டில் நாய்களை பதிவுசெய்யும் கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டு விசர்நாய்க்கடி அதிகாரச்சட்டத்தினை திருத்தவதற்கான வரைபு மசோதா அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வாறே உள்ளூராட்சி பாதீடு தொடர்பான மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் அதிகாரச்சட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் என்பன பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டன. சுற்றுலா வணிகத்தில் ஈடுபடுகின்ற ஹோட்டேல்கள், சிற்றுண்டிச் சாலைகள், தங்குமிடங்கள் தொடர்பான மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் அதிகாரச்சட்டங்களை திருத்துதல் அவ்வாறே மயானங்கள் கட்டளைச் சட்டம் போன்றவற்றை திருத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

## 9.4 அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு

நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் பிரதேச அபிவிருத்தி ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்துதல் இவ்வமைச்சின் பிரதான கருமமாகும். அதன்போது அபிவிருத்திக் கருமங்களை ஒருங்கிணைத்தல், அது தொடர்பான செயன்முன்னேற்றத்தை மீளாய்தல், தேசிய மட்டத்தில் கலந்துரையாடல்களை நடாத்தல், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் விடயப் பரப்பின் கருமங்களிற்குரிய அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டம், செயலாற்றல் அறிக்கை அடங்கலான செயன்முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றை சமர்ப்பித்தல் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான செயற்பாடுகளாகும்.

### 9.4.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான நூலகங்களை அபிவிருத்தி செய்தல்

நாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான குறைந்த வசதிகளுடன் கூடிய பொது நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 16.2 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு இவ்வமைச்சிற்கான பாதீட்டின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்தது. காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டைக் கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் குறைந்த வசதிகளுடன் கூடியதும் கட்டாயமாக முன்னேற்றப்பட வேண்டியதுமான ஒரு உள்ளூராட்சி நிறுவனம் வீதம் உள்ளூராட்சி ஆணையாளரின் சிபார்சுடன் ஒரு மாகாணத்திருந்து தெரிவு செய்யப்பட்டு அந் நூலகத்திற்காக புத்தகங்களையும், அலுவலக தளபாடங்களையும், உபகரணங்களையும் வழங்குதல் மற்றும் நூலகத்தின் திருத்தங்களை மேற்கொள்ளல் போன்ற அத்தியாவசியப் பணிகள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன.

| தொடர் இல. | செயற்திட்டம் | உள்ளூராட்சி அதிகாரசபை | 2014 இன் பௌதீக முன்னேற்றம் % | 2014 இன் நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 01 | உள்ளூராட்சி அதிகாரசபைகளிலுள்ள பொது நூலகங்களிற்கு உபகரணங்களை வழங்குதல் | வெலிகபொல பி.ச<br>ஹெரவபொதான பி.ச.<br>உடுநுவர பி.ச.<br>காங்கேசன்துறை பி.ச.<br>பாலிந்தநுவர பி.ச.<br>வெலிகந்த பி.ச<br>வீரகெடிய பி.ச.<br>புத்தளம் பி.ச. | 100 | 100 |
| 02 | இலத்திரணியல் நூலகங்களிற்காக உபகரணங்களை வழங்குதல் | திருக்கோவில் பி.ச.<br>திருகோணமலை ந.ச.<br>கல்கமுவ பி.ச.<br>பிபில பி.ச.<br>காலி மா.ந..ச.<br>குளியாபிடிய ந.ச.<br>சப்ரகமுவ மத்திய நூலகம்<br>அக்கரைப்பற்று மா.ந.ச. | 100<br>75 | 71.16 |
| 03 | பொது நூலகங்களை நிர்மாணித்தல் (நூலகக் கட்டிடங்களின் ஆரம்ப வேலைகளிற்காக) | கலேவல பி.ச. | 100 | |

*2014 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்*

| ஏற்பாடு (ரூபா மில்.) | செலவினம் (ரூபா மில்.) | நிதிசார் செயன்முன்னேற்றம் % |
|---|---|---|
| 16.2 | 14.51 | 89.5 |

### 9.4.2 தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் - 2014

இவ்வமைச்சின் தலைமையில் மற்றும் செயற்படுத்தலில் சகல மாாகண சபைகளையும் பிரதிநிதித்துவம் செய்து 2014 இன் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி குருணாகல் மாவட்டத்திலுள்ள குளியாபிடிய வடமேல் மாகாண பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் மத்திய மகா வித்தியாலயம் போன்ற இடங்களில் இடம்பெற்றதுடன் அதற்குரிய மாகாண சபைகள் அணியாக இந்த அமைச்சு வெற்றிகரமாக கலந்துகொண்டது.

இதன் கீழ் வடமேல் மாகாணத்திலும் கேகாலை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப்பிரதேசங்களிலுமுள்ள 70 கி.மீ. கிராமிய வீதிகள் புனரமைக்கப்பட்டதுடன் அந்த மன்றங்களுக்கு 33 வென்கல நீர் பவுசர்களும் 448 பல்தேவை நடமாடும் கொட்டில்களும் 3800 சேதனப் பசளை வாளிகளும், 3800 குப்பைத் தொட்டிகளும் (65 லீற்றர்கள்) பகிர்ந்தளிக்கப்பட்டன.

அத்துடன், 2014 ஆம் ஆண்டில் அதற்கு முந்திய ஆண்டுகளில் இடம்பெற்ற நாட்டுக்கு மகுடம் கண்காட்சி தொடர்பான அபிவிருத்திச் செயற்திட்டங்களிற்காக செலுத்தவேண்டியிருந்த தொகைகள் செலுத்தப்பட்டன.

இந்த அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக 2014 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவினம் கீழே தரப்பட்டுள்ளன.

| நிகழ்ச்சித்திட்டம் | தேறிய ஏற்பாடு மொத்த (ரூபா மில்.) | செலவினம் (ரூபா மில்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|
| தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 230 | 220.77 | 96 |




குளியாபிடிய நகர சபையின் இலத்திரணியல் நூலகத்தை தாபித்தல்



பகிந்தளிப்பதற்கு தயார் நிலையிலுள்ள வெண்கல நீர் பவுசர்கள்



ராஜாங்களை பிரதேச சபை அலுவலகத்தை நிர்மாணித்தல்



மத்திய நுவரகம்பளாத்த பிரதேச சபையின் பொத்தானேகம பிண எரிப்பு நிலைய நிர்மாணம்

### 9.4.3 சிறிய மற்றும் நடுத்தரளவு நகர அபிவிருத்தி

நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணிகள் நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டிடத் திணைக்கம் போன்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை உதவியுடன் மாகாண சபைகளில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தினதும் உள்ளூராட்சி ஆணையாளர் அலவலகத்தினதும் பங்குபற்றலுடன் பின்வரும் சிறிய மற்றும் நடுத்தரளவு நகர அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் இவ்வமைச்சின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சிறப்பான புதிய பணியாகும்.

| நகரம் | 2014 இல் செயற்படுத்தப்படும் செயற்திட்டம் | 2014 பௌதீக முன்னேற்றம் % | 2014 நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|
| **ஹக்மன நகர அபிவிருத்தி (2008 - 2016) ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 444.00<br>மொத்தச் செலவினம் 361.85<br>மொத்த நிதி முன்னேற்றம் 81% | • தகனச்சாலையை புனரமைத்தல்<br>• வர்த்தக நிலைய வசதிகளை மேம்படுத்தல்<br>• நகர நுழைவுப் பாதையை புனரமைத்தல<br>• விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல்<br>• நகர மண்டப நிர்மாணம் | 100 | தேறிய ஏற்பாடு ரூபா 60.00 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 58.86 மில்.<br>நிதி முன்னேற்றம் 98 |
| **தெஹிஓவிட நகர அபிவிருத்தி (2010 - 2014) ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 700.00<br>மொத்தச் செலவினம் 282.30<br>மொத்த நிதி முன்னேற்றம் 40% | • பல்தேவை கட்டிட நிர்மாணம் | 95 | தேறிய ஏற்பாடு ரூபா 85.00 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 77.44 மில்.<br>நிதி முன்னேற்றம் 91 |
| **பல்லேவல நகர அபிவிருத்தி (2010 - 2016) ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 350.00<br>மொத்தச் செலவினம் 63.27<br>மொத்த நிதி முன்னேற்றம் 18.1% | • பல்தேவை கட்டிட நிர்மாணம் (1 ஆம் கட்டம்)<br>• பிரதேச சபை கட்டிட திருத்தம்<br>• நகரத்தின் வடிகால நிர்மாணம்<br>• தொழில்நுட்ப நிலையத்திற்கு கணனி பாகங்களை வழங்குதல் | 85<br><br>100 | தேறிய ஏற்பாடு ரூபா 46.00 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 38.43 மில்.<br>நிதி முன்னேற்றம் 84 |

| | | | |
|---|---|---|---|
| **பண்டுவஸநுவர நகர அபிவிருத்தி (2011 – 2016) ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 350.00<br>மொத்தச் செலவினம் 177.75<br>மொத்த நிதி முன்னேற்றம் 50.78% | • பேரூந்து தரிப்பிட நிர்மாணம் - 2 ஆம் கட்டம்<br>• பொது மலசலகூட முறைமையை நிர்மாணித்தல்<br>• தகனச்சாலையினை நிர்மாணித்தல்<br>• புதிய நிர்வாக கட்டிடத்தை பூரணப்படுத்தல்<br>• முன்பள்ளி அபிவிருத்தியும் நிர்மாண நடவடிக்கைகளும்<br>• பண்டுவஸ்நுவர நகரத்தில் நுழைவு வீதிகளை அபிவிருத்தி செய்தல் | 100 | தேறிய ஏற்பாடு ரூபா 76.00 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 75.62 மில்.<br>நிதி முன்னேற்றம் 99.5 |
| **பெலியத்த நகர அபிவிருத்தி (2011 – 2016) ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 638.00<br>மொத்தச் செலவினம் 116.63<br>மொத்த நிதி முன்னேற்றம் 18.28% | • நகர சேவைகள் நிலையத்தினை நிர்மாணித்தல்<br>• அம்பிட்டிய குளத்தினை சுற்றாடல் வலயமொன்றாக மேம்படுத்தல்<br>• சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல்<br>• பேரூந்து தரிப்பிட நிர்மாணம் | 100 | தேறிய ஏற்பாடு ரூபா 70.00 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 69.90 மில்.<br>நிதி முன்னேற்றம் 100 |
| **ஹொரண நகர அபிவிருத்தி (2010 - 2016) ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 350.00<br>மொத்தச் செலவினம் 47.33<br>ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 13.5% | • நகர சபை கட்டிட திருத்தம்<br>• நகர மண்டபத்திற்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்<br>• வாகன தரிப்பிட நிர்மாணம்<br>• கணனிகளை வழங்குதல்<br>• பொது விளையாட்டு மைதான நிர்மாணம்<br>• ஹொரண நகர சபை பொது விளையாட்டு மைதான திருத்தமும் விளையாட்டரங்கு நிர்மாணமும் | 100 | தேறிய ஏற்பாடு ரூபா 12.00 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 10.4 மில்.<br>நிதி முன்னேற்றம் 87 |
| **அக்கரைப்பற்று நகர அபிவிருத்தி (2011 -2016) ரூபா (மில்)**<br>செயற்திட்டக் கிரயம் 350.00<br>மொத்தச் செலவினம் 416.71<br>நிதிசார் முன்னேற்றம் 119.06% | • பொதுச் சந்தை கட்டிட நிர்மாணம்<br>• மாநகர சபைக்குரிய வடிகால் நிர்மாணம்<br>• மாநகர சபை கட்டிட நிர்மாணம்<br>• பொபிகெட் இயந்திரத்தின் பகுதியினைக் கொள்வனவு செய்தல்<br>• 05 புகை இயந்திரங்களை வழங்குதல்<br>• பொது பூங்காவினை மேம்படுத்தல்<br>• கலாசார நிலையத்தை நிர்மாணித்தல்<br>• பிரதேச சபையின் புதிய அலுவல கத்திற்கு உபகரணங்களை வழங்குதல்<br>• நகர மண்டபத்தை நிர்மாணித்தல்<br>• பொது வசதிகளை வழங்குதல்<br>• விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தல்<br>• அக்கரைப்பற்று கலாபவனத்தை திருத்துதல்<br>• பாடசாலை கட்டிட நிர்மாணம் | 85<br>100 | தேறிய ஏற்பாடு ரூபா 220.00 மில்.<br>உள்ளபடியான செலவினம் ரூபா 188.92 மில்.<br>நிதி முன்னேற்றம் 86 |

### 9.4.4 பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - இல. 01

போதிய வருமான வழிகள் இன்மை காரணமாக பொது உட்டகட்டமைப்பு வசதிகள் முன்னேற்றமடைந்துள்ளாத பிரதேச சபைகளில் அந்த வசதிகளை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் செய்வதும் அதன் மூலம் மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளின் தரத்தினையும் விளைவுதிறனையும் அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் துறைகளினூடாக சமூக உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல், புதுப்பித்தல் புனரமைப்பதன் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

01. வாராந்த சந்தைகளை பராமரித்தல்
02. சிறுவர் பூங்காக்களை பராமரித்தல்
03. பொது மலசல கூடங்களையும் சுத்திகரிப்புகளையும் பராமரித்தல்
04. இயந்திர உபகரணங்களை பராமரித்தல்
05. வாகன தரிப்பிடங்களை பராமரித்தல்
06. பிரதேச சபைகளிடமுள்ள நிரந்தர விற்பனை நிலையங்களை முறைப்படி நடாத்திச் செல்லல்
07. பேரூந்து தரிப்பிடங்களை முறைப்படி நடாத்திச் செல்லல்
08. ஆயுர்வேத நிலையங்களையும் சிறுவர் மற்றும் மகப்பேற்று சிகிச்சை நிலையங்களையும் முறைப்படி நடாத்திச் செல்லல்
09. வடிகால் முறைமையினை பராமரித்தல்
10. வீதிகளை பராமரித்தல்
11. குப்பை கூழ முகாமைத்துவம்
12. மக்கள் குடிநீர் செயற்திட்டங்களை பராமரித்தல்
13. நடைபாதை வியாபாரங்களை முறைப்படி நடாத்திச் செல்லல்
14. நகரங்களை துப்பரவு செய்தலும் அலங்கரித்தலும்
15. தகனச் சாலைகள், மயானங்களை முறைப்படி பராமரித்துச் செல்லல்

*நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ள 264 பிரதேச சபைகள் கீழே தரப்பட்டுள்ளன.*

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச சபைகள் | தொகை (ரூபா மில்.) |
|---|---|---|---|
| மேற்கு | கொழும்பு | சீதாவக, கொடிகாவத்த, ஹோமாகம | 14 |
| | கம்பஹா | மினுவன்கொட, மீரிகம, கடான, திவுலபிடிய, கம்பஹா, அத்தனகல்ல தொம்பே, பியகம, ஜாஎல, மஹர, வத்தளை, களனிய | 59 |
| | களுத்துறை | மதுராவல, புளத்சிங்கள, பாலிந்தனுவர, அகலவத்த, தொடங்கொட, வலல்லாவிட, மதுகம, பானந்துறை, ஹொரண, களுத்துறை, பேருவல, பண்டாரகம | 56 |
| மத்திய | கண்டி | பன்வில, உடுதும்பர, பஸ்பாககோரலை, மெத தும்பர, கங்க இஹல கோரலை, உடபளாத, பாதஹேவாஹெட, ஹாரிஸ்பத்துவ, உடுநுவர, யடிநுவர, அக்குரண, குண்டசாலை | 64 |
| | மாத்தளை | ஆம்பன்கங்க, யடவத்த, உக்கல, வில்கமுவ, பல்லேபொல, தம்புள்ளை, உகுவல, ரத்தொட்ட, நாவுல, கலேவல. மாத்தளை | 45 |
| | நுவரெலியா | வலபனை, ஹங்கரன்கெத, கொத்மலை, நுவரெலியா, அம்பகமுவ | 16 |

| | | | |
|---|---|---|---|
| தெற்கு | காலி | வெலிவிடிய திவிதுர, தவலம, நெலுவ, நாகொட, யக்கலமுல்ல, நியாகம, இமதுவ, எல்பிடிய, அம்பலங்கொட, கரன்தெனிய, பத்தேகம, பென்தொட, அக்மீமன, போபே போத்தலை, பலபிடிய, ரத்கம, ஹபராதுவ | 65 |
| | மாத்தறை | கிர்ந்தபுஹுல்வெல்ல, மாலிம்பட, திஹகொட, அதுரலிய, முலயடின, பஸ்கொட, பிடபெத்தர, ஹக்மன, வெலிகம, கொடபொல, கம்புறுபிடிய, அகுரஸ்ஸ, தெவிநுவர, மாத்தறை, திக்வெல்ல | 64 |
| | ஆம்பாந்தோட்டை | லுனுகம்வெஹர, தங்கல்ல, அம்பாந்தோட்டை, அங்குனுகொலபெலஸ்ஸ, சூரியவெவ, பெலியத்த, கடுவன, திஸ்ஸமஹாராம, அம்லந்தொட்ட, வீரகெடிய | 41 |
| ஊவா | பதுளை | மீகஹகிவுல, ரிதீமாலியத்த, கன்தகெடிய, லுனுகல, சொரணாதொட, பண்டாரவலை, பதுளை, ஊவா பரணகம, எல்ல, மஹியங்கனை, ஹல்துமுல்ல, ஹப்புத்தளை, பஸ்ஸறை, வெலிமட, ஹாலிஎல | 59 |
| | மொனராகல | புடல்கும்புர, மெதகம, கதிர்காமம், மடுள்ள, தனமல்வில, வெல்லவாய, சியம்பலாண்டுவ, மொனராகலை, புத்தள, பிபில | 41 |
| சப்ரகமுவ | இரத்தினபுரி | அயகம, கொலன்ன, வெலிகபொல, பலங்கொட, நிவிதிகல, கஹவத்த, இம்புள்பே, எம்பிலிபிட்டிய, இரத்தினபுரி, பெல்மடுள்ள, கலவானை, கொடகவல, குருவிட, எஹலியாகொட | 47 |
| | கேகாலை | ஆரணாயக, புளத்கொஹுபிடிய, யடியன்தொட்ட, தெரணியகல, கேகாலை, தெஹிஓவிட, கலிகமுவ, ரம்புக்கன, ருவன்வெல்ல, வராகாபொல, மாவனல்ல | 38 |
| வடமேல் | குருணாகல் | கிரிபாவ, கொபய்கனே, பொல்பிதிகம, ரதீகம, அலவ்வ, நிகவெரடிய, பொல்கஹவல, பண்டுவஸநுவர, மஹவ, மாவத்தகம, உடுபத்தாவ, கல்கமுவ, இப்பாகமுவ, வாரியபொல, பன்னல, குருணாகல், நாரம்மல, பிங்கிரிய, குளியாபிடிய | 69 |
| | புத்தளம் | நவவத்தேகம, கருலவலகஸ்வெவ, வனாதவில்லுவ, ஆனமடுவ, ஆரச்சிகட்டுவ, புத்தளம், சிலாபம், நாத்தாண்டிய, வென்னப்புவ, கல்பிடிய | 39 |
| வட மத்திய | அநுராதபுரம் | கெபிதிகொல்லாவ, பதவிய, திரப்பனே, ஹொரவபொதான, கலன்பிந்துனுவெவ, ர்மபேவ, இபலோகம, மெவச்சிய, கல்னேவ, ராஜாங்கனை, மிஹிந்தலை, பலாகல, கஹடகஸ்திகிலிய, நொச்சியாகம, ம.நு.ப, நெ.நு.ப, கெகிராவ, தலாவ | 69 |
| | பொலன்னறுவ | வெலிகந்த, லங்காபுர, எலஹர, ஹிங்குரன்கொட, மெதிரிகிரிய, திம்புலாகல, தமன்கடுவ | 28 |

| | | | |
|---|---|---|---|
| கிழக்கு | மட்டக்களப்பு | மன்முனைபற்று, மன்முனை கிழக்கு, கோரலைபற்று, போரதீவுபற்று, மன்முனை மேற்கு, கோரலைபற்று வடக்கு, கோரலைபற்று மேற்கு, மன்முனை தெற்கு, ஏராவில் பற்று | 37 |
| | அம்பாறை | அக்கரைபற்று, லாஹுகல. மஹஓய, நாமல்ஓய, பதியதலாவ, காரைதீவு, இரக்காமம், தமன, நிந்தவூர், நவிதன்வேலி, ஆலையடிவேம்பு, திருக்கோவில், தெஹியத்தகண்டி, உஹன, அட்டாளைச்சேனை, பொத்துவில், சம்மாந்துறை | 72 |
| | திருகோணமலை | வெருகல், சேருவில, கோமரன்கடவல, மொரவெவ, பதிவி ஸ்ரீபுர, தம்பலகாமம், மூதூர், கின்னியா, குச்சவேலி, கந்தளாய், பட்டிணமும் சூழலும் | 44 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | வலிகாமம் தெற்கு, சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு, நல்லூர், பருத்தித்துறை, நெடுந்தீவு, வேலனை, வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்கு, பருத்தித்துறை, காரைநகர் | 52 |
| | மன்னார் | மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு | 18 |
| | வவுனியா | வவுனியா தெற்கு சிங்களம், வவுனியா தெற்கு தமிழ், வவுனியா வடக்கு, வென்கலசெட்டிகுளம் | 16 |
| **மொத்தம்** | | | **1,053** |

இதற்காக ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாடு ரூபா 1,357.4 மில்லியனாக காணப்பட்டதுடன், ஒட்டுமொத்த செலவினம் ரூபா 1,053.8 மில்லியனாகும். இதன்படி, இதன் நிதிசார் முன்னேற்றம் 78% ஆகும்.

### 9.4.5 பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - இல. 02

பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

*(அ). பிரதேச சபைகளில் இயந்திர உபகரண பிரிவுகளை நிறுவுதல்.*

வாராந்த சந்தை, குப்பைகூழ முகாமைத்துவம், வடிகாலமைப்பு, நுழைவு வீதிகள், சிறுவர் பூங்காக்கள், பொது சுத்திகரிப்பு, மலசலகூட வசதிகள் போன்ற சமூக உட்கட்டமைப்பு வசதிகளை பேணுதல், போதியளவு வருமானமீட்டாத பிரதேச சபைகளின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்குடன் அச் சபைகளில் இயந்திர உபகரண பிரிவுகளை நிறுவுதல்.

பிரதேச சபைகளின் அத்தியாவசிய மூக உட்கட்டமைப்பு வசதிகளை பராமரிப்பதற்காக பின்வரும் இயந்திர உபகரணங்கள் 2014 இல் வழங்கப்பட்டன.

- Backhoe Loader 4wd
- Vibrating Roller 8 Ton
- Motor Grader 100 hp
- Dump truck (Tipper) - 7 Ton
- Truck Mounted Water Browser (6000 L)

- ➢ Crew Cab Long Wheel Base
- ➢ Crew Cab Short Wheel Base
- ➢ Tractors
- ➢ Road Sweeper
- ➢ Truck Mounted Loader 12 m
- ➢ Skid Loader 0.5$m^3$
- ➢ Walking Steel Roller 700 Kg

### (ஆ). மாகாணங்களில் வறுமைக் குறைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

சகல மாகாணங்களிலும் பிரதேசங்களை இலக்காகக் கொண்ட வறுமைக் குறைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி குறைந்த வருமானம் கொண்ட சனத்தொகையின் அடிப்படையில் ஏற்பாடுகளை வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மாகாணங்களில் வறுமையான குடும்பங்கள் அதிகமாக வசித்துவருகின்ற பிரதேசங்களிலுள்ள மக்களின் அடிப்படை வசதிகளையும் வாழ்வாதாரத்தையும் முன்னேற்றுவதற்காகவும் மாகாணத்திலுள்ள பல்வேறு பிரதேசங்களிலும் பரந்து காணப்படுகின்ற சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள மக்கள் தொகுதி மற்றும் அப் பிரதேசங்களை இலக்காகக் கொண்டு அக் கைத்தொழில்களை கட்டியெழுப்புவதற்காக வசதிகள் வழங்கப்படுவதனை நோக்காகக் கொண்டு பின்வரும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- ➢ மாடு வளர்ப்பு, கிழக்கு, வடமேல், சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள குறைந்த வருமானமுடைய குடும்பங்கள்
- ➢ குடிநீர் - வட மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்கள்
- ➢ உள்நாட்டு ஆடை உற்பத்தி, மட்பாண்டக் கைத்தொழில், தும்பு சார்ந்த உற்பத்தி தென் மாகாணம்
- ➢ இனங்காணப்பட்ட கிராமங்களில் கீழ்க்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி

### (இ). குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் அபிவிருத்திக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்குதல்.

2013 இன் பாதீட்டு பிரேரணையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் அபிவிருத்திக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்குதல் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் அரம்பிக்கப்பட்டதுடன் இதன் கீழ் குறைந்த வருமானம் கொண்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வருடாந்த வருமானத்தை ரூபா 10 மில்லியன் வரை அதிகரித்துக் கொள்வதும் அபிபிரதேசங்களில் வாழந்து வருகின்ற குறைந்த வருமனம் கொண்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவதுமே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

- ➢ வாராந்த சந்தைகளையும் சிறிய வியாபார நிலையங்களையும் அபிவிருத்தி செய்தல்
- ➢ கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்தல்
- ➢ நூலகங்கள்/ சுகாதார நிலையங்கள்/ ஆயுர்வேத நிலையங்கள் மற்றும் மாநாட்டு மண்டபங்களை நிர்மாணித்தல்
- ➢ சிறிய நீர் வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்
- ➢ வாகன நிறுத்தகங்கள் மற்றும் தரிப்பிடங்களை நிர்மாணித்தல்
- ➢ பொது விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல்
- ➢ பூங்காக்கள் மற்றும் ஓய்விடங்களை அபிவிருத்தி செய்தல்
- ➢ தகனச்சாலைகள் மற்றும் மயானங்களை அபிவிருத்தி செய்தல்
- ➢ சுத்திகரிப்பு வசதிகளை மேம்படுத்தல்
- ➢ நிர்வாக அலுவலகங்களை மேம்படுத்தல்
- ➢ ஏனைய பல்வேறு நடவடிக்கைகள்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கருமங்களும் அவற்றின் செயன்முன்னேற்றங்களும் வருமாறு.

| **தொடர் இல.** | **நிகழ்ச்சித்திட்டம்** | **செலவினம் ரூபா மில்** | **நிதி முன்னேற்றம் %** | **பௌதீக முன்னேற்றம் %** |
|---|---|---|---|---|
| 01 | 820 பல்நோக்கு கொட்டில்கள் கொள்வனவு | 24.77 | 95 | 100 |
| 02 | வெண்கல தண்ணீர் பவுசர் கொள்வனவு | 58.58 | - | 100 |
| 03 | இயந்திரங்கள் கொள்வனவு | 2,732.58 | 25 | 100 |
| 04 | ஊள்ளூராட்சி நிறுவனங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக நிதி உதவி வழங்கல் | 224.22 | 79 | 100 |
| 05 | வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக | 171.46 | 83 | 100 |
| 06 | நூட்டுக்கு மகுடம் கண்காட்சியுடன் இணைந்ததாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் | 3.46 | 93 | 100 |
| 07 | இவற்றுடன் இணைந்த ஏனைய பணிகள் | 0.27 | - | - |
| **மொத்தம்** | | **3,215.34** | | |

| | **மொத்த தேறிய ஏற்பாடு ரூபா மில்** | **மொத்த செலவினம் ரூபா மில்** | **நிதி முன்னேற்றம் %** | **பௌதீக முன்னேற்றம் %** |
|---|---|---|---|---|
| இந்த 03 நிகழ்ச்சித்திட்டங்களிற்காக | 3,215.50 | 3,215.34 | 100 | மேற்படி |

### 9.4.6 அவசர நிலைமைகளுக்கான இயலளவு கட்டியெழுப்புதல் செய்திட்டம் - கட்டம் iii

இந்த ஆண்டில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் அக்கரைப்பற்று மாநகர சபைகளிற்கும் அம்பாரை நகர சபைக்கும் உள்நாட்டு நிதிகளைப் பயன்படுத்தி தீயணைணத்தல் இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் தேவையான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அவற்றின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் கீழுள்ளவாறாகும்.

| தேறிய ஏற்பாடு ரூபா மில் | மொத்த செலவினம் ரூபா மில் | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|
| 259 | 219.22 | 85 | 90 |

### 9.4.7 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளில் கட்டிடங்களை நிர்மாணித்தல்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் கீழுள்ளவாறாகும்.

| தேறிய ஏற்பாடு ரூபா மில் | மொத்த செலவினம் ரூபா மில் | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|
| 48 | 47.47 | 99 | 80 |

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருமங்கள் பின்வருமாறாகும்.

| தொடர் இல. | கருமம் | செலவிடப்பட்ட தொகை ரூபா மில். |
|---|---|---|
| 01 | பதவி ஸ்ரீ புர பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | 0.6 |
| 02 | ஏராவூர் நகர சபை கட்டிட நிர்மாணம் | 3.7 |
| 03 | அம்பாரை பொது விளையாட்டு மைதானம் | 2.0 |
| 04 | விளையாட்டரங்கு நிர்மாணம் - தமன | 0.6 |
| 05 | கலாச்சார நிலையத்தை நிர்மாணித்தல் | 18.2 |
| 06 | தளாபாட உபகரணங்களை கொள்வனவு செய்தல் - பதவி ஸ்ரீ புர | 0.8 |
| 07 | சம்மாந்துறை பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | 5.0 |
| 08 | ஏராவூர் நகர மண்டப நிர்மாணம் | 4.5 |
| 09 | பொத்துவில் பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | 8.7 |
| 10 | மின்சாரம் வழங்குதல் - அட்டாளச்சேனை | 3.3 |
| **மொத்தம்** | | **47.4** |

### 9.4.8 சுயதொழில் உருவாக்கல் செயற்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுயதொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் 2100 சைக்கிள்கள் வழங்கப்பட்டன. உள்ளபடியாக இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டங்களின் படி நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் கீழுள்ளவாறாகும்.

| தேறிய ஏற்பாடு ரூபா மில் | மொத்த செலவினம் ரூபா மில் | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|
| 30.00 | 13.31 | 44 | 100 |

### 9.4.9 தரவு முறைமையொன்றை தயாரித்தல்

அமைச்சின் செயற்பாடகளிற்காக தரவு முறைமையொன்றை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதற்காக 2014 இல் மேற்கொள்ளப்பட்ட செலவினம் கீழுள்ளவாறாகும்.

| தேறிய ஏற்பாடு ரூபா மில் | மொத்த செலவினம் ரூபா மில் | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|
| 30.00 | 1.89 | 63 | ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. |

## 9.5 கழிவு முகாமைத்துவம்

**தூரநோக்கு**

அனைவருக்கும் மிக ஆரோக்கியமான சுற்றாடல்

**குறிக்கோள்**

உள்ளூராட்சி அதிகாரப்பிரிவில் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்

**கொள்கைகளும் உத்திகளும்**

**01. கழிவுகள் உருவாகுவதனைக் குறைத்தல்**

வீட்டு, வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளில் கழிவு உருவாக்கலைக் குறைப்பதற்காக தொடர்புடைய தரப்பினர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பல்வேறு உத்திகளை அறிமுகப்படுத்துதல்.

**02. வள மீள்உற்பத்தியினை உச்சப்படுத்தல்**

- கழிவுகள் சேரும் இடங்களிலேயே வகைப்படுத்தல்.
- உக்கிப்போகும் கழிவுகளிலிருந்து வீடுகளிலேயே சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு வீட்டுமையாளர்களை ஈடுபடுத்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் நகரத்தை மையமாகக் கொண்டு சேதனப் பசளை நிலையங்களை தோற்றுவித்தல்
- கழிவுகள் மீள் சுழற்சி முறையினை அறிமுகப்படுத்தலும் மக்களை ஊக்கப்படுத்தலும்

**03. சுத்தமான நில நிரப்புதலை அறிமுகப்படுத்தல்**

### 9.5.1 கழிவு முகாமைத்துவ உதவி நிலையத்தின் நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம்

| செயற்திட்டம் | செயற்திட்ட அதிகார பிரதேசம் | உள்ளபடியான செலவினம் ரூபா மில். | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|
| சுற்றாடல் பாதுகாப்பு நிலையங்களை தாபித்தல் (சேதனப் பசளைப் பிரிவுகளைத் தாபித்தல், மேம்படுத்தல் மற்றும் சேதனப் பசளைச் செயற்திட்டமும் அதற்கான பாதுகாப்பு வேலிகளும், ஊழியர் ஓய்வு நிலையங்களை நிர்மாணித்தல்) | கற்பிட்டி பி.ச. | 2.85 | 100 |
| | கின்னியா ந.ச | 2.64 | 100 |
| | தவலம பி.ச | - | 30 |
| | நுவரகம்டபளாத பி.ச | 3.57 | 100 |
| | மினிபே பி.ச | 0.13 | 100 |
| | நுவரெலியா பி.ச | 6.05 | 100 |
| | மன்னார் பி.ச | 5.79 | 100 |
| | பெல்மடுல்ல பி.ச | 5.57 | 100 |
| | புத்தள பி.ச | 0.50 | 100 |
| | திருகோணமலை ந.ச | 0.62 | 100 |
| | நாத்தாண்டி பி.ச | 4.13 | 100 |
| | மஹியங்கனை பி.ச | 6.37 | 100 |
| | ஊவா பரணகம பி.ச | 5.08 | 100 |
| | கதிர்காமம் பி.ச | 0.04 | 100 |
